(ஆ) மழையினால், சென்னை, ஸ்டார்லிங் சாலையில் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு வீட்டு வசதி ஏற்படுத்தித் தருவது குறித்து.

திரு. வ. துலுக்காணம் : தலைவர் அவர்களே, ''சென்னை 62-வது வட்டம், நுங்கம்பாக்கம் ரயிலடி அருகிலுள்ள ஸ்டார்லிங் சாலையில் சுமார் 50 குடும்பங்கள் சமீபத்தில் பெய்த மழையின் காரணமாக வீடிழந்து பாதிக்கப்பட்டுள்ளதால், அவர்களுக்கு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடுகளுக்கு வகை செய்ய அவசியம் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, மாநகராட்சி வட்ட எண் 101-ல் புஷ்பவனம் குடிசைப் பகுதி மாற்று திட்டத்தை செயல்படுத்துவதற்காக, அங்கு கணக்கெடுப்பில் சேர்க்கப்பட்ட குடிசைவாழ் மக்கள் லயோலா கல்லூரியின் மதில் சுவரையொட்டி வடபுறத்தில், குடிசைப் பகுதி மாற்று வாரியத்தினரால், தற்காலிகமாக குடிசைகளில் குடியமர்த்தப்பட்டார்கள்.

மேற்கூறப்பட்ட குடிசைகளைத் தவிர, 51 புதிய குடிசைகள் லயோலா கல்லூரியின் மதில் சுவரை யொட்டி அனுமதியின்றி அத்துமீறி, போடப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேற்படி 51 புதிய குடிசைகளில் வாழும் குடும்பங்கள், இதற்கு முன் மாநகராட்சி வட்ட எண் 112-ல் உள்ள நமசிவாயபுரம் திறந்த வெளி மனைப்பகுதி மற்றும் திருவேங்கடபுரம், ஜெய லஷ்மிபுரம், மாயாண்டி காலனி ஆகிய பகுதிகளில் வாடகை வீடுகளில் வசித்து வந்தவர்களாவர். இதுபற்றி நமசிவாய புரம் திறந்த வெளி மனைப்பகுதிகளில் விசாரணை செய்ததில், இவர்கள் தாங்களாகவே தங்களது முந்தைய வாடகை வீடுகளை காலி செய்திருக்கின்றனர் என்பது தெரியவருகிறது. இம்மாதிரி ஆக்கிரமிப்புடன் குடிசைகள் போட்டுக்கொண்டால் குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் மூலமாக நிரந்தரமான மாடி குடியிருப்புகள் பெற முன்னுரிமை கிடைக்குமென்ற எண்ணத்தில், குடிசைகள் போட்டுக் கொண்டுள்ளனர்.

இவர்கள் சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டதாக தெரியவில்லை என்று குடிசைப்பகுதி மாற்று வாரியத் தலைவர் அறிவித்துள்ளார். இவர்கள் ஸ்டார்லிங் ரோடின் முக்கிய போக்குவரத்து சாலையோரத்தில் குடிசைகளை அமைத்துக் கொண்டிருப்பதால், போக்குவரத்து பாதிக்கப்படுவதுடன் சுற்றுப்புற சுகாதாரச் சீர்கேடு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, இவர்கள் இங்கிருந்து அகற்றப்பட வேண்டியவர்கள். மாநகராட்சி வட்டம் 63-ல் தற்சமயம்

1979 மார்ச் 7] [திரு. எஸ். இராகவானந்தம்]

வேறு குடியிருப்புத் திட்டங்களோ அல்லது காலி குடியிருப்புகளோ இல்லாததால், அவர்களுக்கு குடியிருப்புகள் வழங்க இயலவில்லை என்று குடிசைப்பகுதி மாற்று வாரியம் அறிவித்துள்ளது.

திரு. வ. துலுக்காணம் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லும்போது கணக்கெடுப்பில் சேர்க்கப்பட்டவர்கள் குடியமர்த்தப்பட்டுள்ளார்கள் என்று சொன்னார்கள். லயோலா கல்லூரிக்கு முன்னால் இரண்டு பக்கங்களிலும் குடிசைகள் போட்டிருக்கிறார்கள். ஒரு பக்கத்தில் இருப்பவர்கள் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருக்கிறார்கள், இன்னொரு பக்கத்தில் இருப்பவர்கள் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இல்லையா. இவர்களுக்கும் குடிசைமாற்று வாரியத்தின் மூலம் ஏன் வீடுகள் வழங்கககூடாது? இவர்களும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்கள்தான். ஆயிரம் மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும்போது இந்த 51 குடும்பங்களுக்கு ஏன் வீடுகள் கொடுக்கக்கூடாது? ரூ. 14·2 கோடி வீடு கட்டும் திட்டத்திற்காகச் செலவு செய்ய முன்வருகிறோம். அப்படியிருக்கும்போது சில லட்சம் ரூபாய் செலவு செய்து இந்த 51 குடும்பங்களுக்கு வீடுகள் வழங்க அரசாங்கம் முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

[முற்பகல் 11-20]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : குறிப்பிட்ட ஒரு இடத்தில் குடிசை மாற்று வாரியத்தால், குடிசைகளில் குடியிருப்பவர்களுக்கு வீடு கட்டுவது என்று முடிவு எடுத்து, குறிப்பிட்ட அந்தக் குடிசைகளில் இருப்பவர்களுடைய பெயர்களை பட்டியலில் சேர்த்து, அவர்களுடைய புகைப்படத்தையும் எடுத்து அவர்களிடம் கொடுத்து, வீடுகள் கட்டுவதற்கு முன்பாக அவர்களிடம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஐம்பது ரூபாய் கொடுக்கப்பட்டு அவர்கள் மாற்று இடத்திற்குப் போகும்படி மாற்றப்படுகிறார்கள்—இதை transit camp என்று சொல்வதுண்டு. வீடுகள் கட்டி முடிந்த பின்னால் இவர்கள் கட்டப்பட்ட மாடி வீடுகளுக்கு வந்துவிடுகிறார்கள். இந்த பட்டியலில் சேர்க்கப்படாத, People not enumerated, யாருக்கும் வீடுகள் கொடுக்கப்படுவதில்லை. அப்படி கொடுப்பது நியாயமும் இல்லை யாருக்காக வீடுகள் கட்டப்படுகின்றனவோ, அவர்களுக்கு—புகைப்படம் யார் யாரிடம் இருக்கிறதோ அவர்களுக்கும், புகைப்படம் இல்லையென்றால், அவர்கள் அங்கு முன்னால் இருந்தார்கள் என்பதற்கான ஆதாரங்கள் இருந்தால், அவைகளை காண்பித்தால் அவர்களுக்கும் வீடுகள் கொடுக்கப்படுகிறது. மற்றவர்களுக்குக் கொடுக்கப்படமாட்டாது.

திரு. வ. துலுக்காணம் : தலைவரவர்களே, அங்கே குடிசைப் போட்டிருப்பவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. ஆளும் கட்சியைச் சேர்ந்த நமது

மதிப்பிற்குரிய முன்னவர் அவர்கள் பெயரில் மன்றம் வைத்துக் கொண்டு, அங்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகததை வளர்த்துக் கொண்டிருப்பவர்கள்தான. அங்குள்ளவர்கள

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலமை]

என்னிடத்திலே சொன்னார்கள். அவர்களிடத்தில் சிலர் வந்து ஏதோ வாங்கிக்கொண்டு அவர்களை ஏமாற்றி விட்டதாக சொல்லுகிறார்கள். அவை முன்னவர் அவர்களின் பெயரில் மன்றம் வைத்துக்கொண்டு, குடிசைகளைப் போட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் தங்களுக்கும் வீடுகள் வேண்டும் என்று கேட்கிறார்கள். நீங்கள் அவை முன்னவர் அவர்களின் பெயரால் மன்றம் வைத்துக்கொண்டு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை வளர்த்துக் கொண்டிருக்கிறீர்கள், ஆகவே உங்களுக்கு நிச்சயமாக உதவி செய்வார்கள் என்று சொன்னேன். ஆகவே அமைச்சர் அவர்கள், அவை முன்னவர் அவர்களின் பெயரில் மன்றம் வைத்து நடத்திக்கொண்டிருக்கிறார்கள், உங்கள் கட்சியையும் வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள், அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எங்கள் கட்சி பெயரில் மன்றம் கிடையாது. ஆளும் கட்சியைச் சேர்ந்த முன்னவர் அவர்களின் பெயரில் தான் அங்கே மன்றம் வைத்து நடத்துகிறார்கள். ஆகவே அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 30—6—77-ம் தேதியன்று வரை யார் யார் குடிசை போட்டிருந்தார்களோ அவர்களுடைய குடிசைகள் அகற்றப்படக் கூடாது என்று ஆணையிடப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னால், ஏற்பட்டிருக்கின்ற குடிசைகளை அகற்றிவிடவேண்டும் என்று அரசு உத்தரவிட்டிருக்கிறது. அதை செயல்படுத்தும்போது மாண்புமிகு உறுப்பினர்களும், மற்றவர்களும் அரசுக்கு ஒத்துழைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மு. அரங்கநாதன் : துணைத் தலைவர் அவர்களே, ஒரு தன்னிலை விளக்கம.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்களைப் பற்றி ஒன்றும் பேசவில்லையே, உட்காருங்கள்.....

திரு. மு. அரங்கநாதன் : என் தொகுதியைப் பற்றி சொல்லியிருக்கிறார்கள். என் தொகுதியிலுள்ள ஒரு இடத்தைப் பற்றி அமைச்சர் அவர்கள் தவறாக சொல்லுகிறார்கள். அதை நான் விளக்க வேண்டாமா? அதற்காகத் தான் தன்னிலை விளக்கத்திற்கு நேரம் கேட்கிறேன் . . . . .

1979 மார்ச் 7]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்களைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. ஆகவே நீங்கள் தன்னிலை விளக்கம் கொடுக்க முடியாது, தயவு செய்து உட்காருங்கள்.

திரு. மு. அரங்கநாதன் : அமைச்சர் அவர்கள் சொன்னது தவறானது ....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; ரூல் 41-ன் கீழ் யார் திர்மானம் கொடுத்திருக்கிறார்களோ அவர்கள் மட்டும் தான் சில விளக்கங்களை கேட்க முடியும், மற்றவர்கள் பேச முடியாது. அமைச்சர் அவர்கள் சொன்னது தவறு என்றிருந்தால், அமைச்சர் தவறாக சொன்னார் என்று அவர்கள் மீது உரிமைப் பரச்சினையை எழுநிக்கொடுங்கள், அதைப்பற்றி பின்னால் பார்க்கலாம். ஆனால் இப்போது நீங்கள் எழுந்து பேச முடியாது. உட்காருங்கள்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : நான் பேசவேண்டும் என்று சொல்லியிருந்தேன். நேற்று முன்தினமும் பேச முடியவில்லை. நேற்றும் பேசுவதற்கு நேரம் கிடைக்கவில்லை.......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்றைக்கு பேசப் போகிறீர்கள், ஆகவே அதைப்பற்றி இப்போது கேட்க வேண்டியதில்லை.

6. அரசினர் சட்ட முன்வடிவு.

தனியார் வனங்களைப் பாதுகாத்தல் (கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நீட்டித்தல்) சட்டமுன்வடிவு, 1979

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு தனியார் வாகனங்களைப் பாதுகாத்தல் (கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நீட்டித்தல்) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்''.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை நான் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.